1994 மே 5] [திருமதி இரா. இந்திரகுமாரி]

பாக இந்த அரசு எடுக்கும் என்றும், அப்படி எந்த உத்தரவையும் அரசு பிறப்பிக்கவில்லை என்பதையும் நான் திரும்ப தெரிவித்துக் கொள்கிறேன்.

வதந்திகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு பேசி பழக்கப் படுகின்ற வழக்கத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்துக்கொள்ள வேண்டாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன் (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. நீங்கள் ''ஃபேக்ட்'' என்று சொன்னால், அதற்கு வேண்டிய ஆதாரம் வேண்டும். நீங்கள் நிறுத்தியிருக்கிறார்கள் என்கின்றீர்கள், ஆனால், அந்தமாதிரி நிறுத்தக்கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். மாணவர்கள் வந்தால் சத்துணவு வழங்கப்பட வேண்டும் என்று உத்தரவு இருக்கிறது. (குறுக்கீடு) இல்லை. இதை வைத்து எங்காவது நிறுத்தினார்கள் என்றால் நீங்கள் போய் கேட்கவேண்டும். (குறுக்கீடு) நீங்களே போய் கேட்க வேண்டும்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இதிலே முழு உரிமை, முழுப் பங்கு ஒத்துழைக்கக்கூடிய முழு வாய்ப்பு இருக்கிறது. குழந்தைகளுக்குச் சோறு போடவேண்டுமென்பது அரசாங்கத்தினுடைய அக்கறை மட்டுமல்ல, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் உள்ள அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இதிலே பெரிய அக்கறையும் இருக்கிறது. அவர்கள் பணியாற்றுவதற்குரிய வாய்ப்பும் இருக்கிறது. ஏதாவது குறிப்பிட்ட இடத்தில் அப்படிப்பட்ட சம்பவம் நடைபெற்றிருந்தால், அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கிறேன். ஆனால், எந்த இடத்திலேயும் இப்படிப்பட்ட குழந்தைகள் வந்தால் சோறு போட வேண்டாம் என்ற உத்தரவை அரசு பிறப்பிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஈ) கோவை மாவட்டத்தில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கு ஆழியாற்றிலிருந்து தண்ணீர் விட வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர், அடுத்த பிரச்சினை, திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் கோவை மாவட்டம் வறட்சிப் பிடியிலே சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. இன்றைய தினம்

பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, வால்பாறை பகுதியிலே இருக்கின்ற தென்னை மரங்கள் எல்லாம் தண்ணீர் இல்லாமல் காய்ந்து கருகிக் கொண்டிருக்கின்ற நிலையைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே இன்றைககு அந்தத் தென்னை மரங்களுக்கு எல்லாம் 10 நாட்களுக்கு உயிர்த் தண்ணீர் கொடுத்தால் தான் ஓரளவுக்கு அந்த மரங்களை காப்பாற்ற முடியும் என்ற நிலையில் அங்கே இருக்கின்ற விவசாயிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த தென்னை மரங்கள் எல்லாம் 40, 50 ஆண்டுகளுக்குரியது. அவற்றினை எல்லாம் அந்த விவசாயிகள் தண்ணீர் மட்டும் அல்ல தங்களுடைய கண்ணீரையே விட்டு வளர்த்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையிலே இன்றைக்கு அந்தத் தென்னை மரங்களுக்கு உயிர்த் தண்ணீர் வேண்டுமென்று இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஆளியாறு பாசனத்திலே. .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : அமைச்சருக்கு இரண்டு பக்கமும் இரண்டு உறுப்பினர்கள் போய் இருந்தால் எப்படி? உறுப்பினர் என்ன பேசினார்கள் என்று கேட்டு, அவர் பதில் சொல்ல வேண்டுமா இல்லையா?

<u>திரு. வி. பி. சந்திரசேகர்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளியாறு பாசனத்திலே பொள்ளாச்சி கால்வாய், அதிலே ''ஏ'' பிரிவு, வேட்டைக்காரன்புதூர், சேத்துமடை வாய்க்கால், திருமூர்த்தி அணையிலிருந்து வெளிவருகின்ற பரம்பிக்குளம் வாய்க்கால்களிலே உயிர்த் தண்ணீர் கொடுத்து அங்கே வாடிக்கொண்டிருக்கின்ற தென்னை மரங்கள் மட்டுமல்ல விவசாயிகளுடைய கண்ணீரைத் துடைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. சந்திரசேகர் அவர்கள் ஆளியாற்றிலிருந்து தென்னை மரங்களுக்கு உயிர்த்தண்ணீர் விடவேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். இந்த அரசைப் பொறுத்த மட்டிலும் பல்வேறு காலக்கட்டங்களிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று சென்ற ஆண்டும் சரி அதற்கு முந்தைய ஆண்டுகளிலும் சரி, மிகச் சிறப்பாக அந்தப் பகுதிகளிலே தென்னை மரங்களைக் காப்பாற்றுவதற்கு நடவடிக்கையை எடுத்த அரசு புரட்சித் தலைவியினுடைய அரசு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள்.

1994 மே 5] [திரு. எஸ். கண்ணப்பன்]

பிற்பகல் 12-55

ஆகவே, கண்ணீர் விடுகின்ற அளவுக்கு எந்த விவசாயியையும் இந்த அரசு கொண்டு போகாது என்ற உறுதியை நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயியின்பால் மிகுந்த அக்கறை கொண்டுள்ள காரணத்தினாலே தான் நீங்கள் வைக்கின்ற கோரிக்கைகளை எல்லாம் உடனுக்குடன் நிறைவேற்றுகின்ற தாய் உள்ளத்தோடு இன்றைக்குப் புரட்சித் தலைவி அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அந்த அடிப்படையிலேதான் இன்றைக்குக் கூட பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்திலேகூட 4 மண்டல பாசனம் எல்லாம் வந்திருக்கிறது. கோரிக்கைகளை எல்லாம் ஏற்று, விவசாயிகளுக்கும் 900 கோடி ரூபாயிலே இலவச மின்சாரம் தருகிறோம். ஆகவே, விவசாயிகள் கண்ணீர் விடுகின்ற பிரச்சினையே இந்த ஆட்சிக் காலத்திலே இல்லை என்பதையும், வேண்டுமானால் அந்தக் கண்ணீர் ஆனந்தக் கண்ணீராக இருக்கும் என்பதை மாத்திரம் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, உயிர்த்தண்ணீர் விடுகின்ற பிரச்சினை என்னுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. இது சம்பந்தமாக அதிகாரிகளிடத்திலே அறிக்கை கேட்டிருக்கிறேன். இன்றோ அல்லது நாளையோ முடிவு எடுத்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

(உ) மதுரை நகரில் இரவு 10 மணிக்கு மேல் சிறு கடைகளைத் திறந்து வைக்கக் கூடாதென வற்புறுத்தப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆண்டித் தேவர் அவர்கள், கொஞ்சம் இருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். மதுரை நகரில் இரவு 10 மணிக்கு மேல் சிறு கடைகளைத் திறந்து வைக்க அனுமதிக்க மாட்டேன் என்கிறார்கள் என்ற ஒரு பிரச்சினையை நீங்கள் பேரவை விதி 55-ன்கீழ் கொடுத்திருந்தீர்கள். அதே பொருள் பற்றி திரு. தெய்வநாயகம், திரு. அமர்நாத் அவர்களும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். நான் இன்றைக்கு ஏற்கெனவே 79 பிரச்சினைகளுக்கு இங்கே பதில் வைத்து இருக்கிறேன். உங்களுடைய பதில் இன்னும் வரவில்லை. வந்தவுடன் உங்களுக்குச் சுற்றறிக்கையாக அனுப்பப்படும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பிரச்சினை மிகவும் முக்கியமான பிரச்சினை என்றுதான் நான் சொன்னேன். 10 தினங்கள் ஆகிவிட்டன. போலீஸ் இந்த அவைக்கே தகவல் கொடுக்கின்ற ஒரு முக்கியமான இலாக்கா. அவர்களே தகவல் தரவில்லை என்று தகவலைச் சொல்கின்றீர்கள். மதுரை மாநகரம் என்